வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC.228/2018 |
| வழக்கு சாட்சி | : | Pw37 |
| நாள் | : | 31.01.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுசில்குமார் சர்மா | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**(சாட்சிக்கு ஹிந்தி மொழி மட்டுமே தெரியும் என்பதால் சாட்சியின் வாக்குமுலத்தை பதிவு செய்வதற்கு ஏதுவாக ஹிந்தி மற்றும் தமிழ் மொழி அறிந்த ஆசிரியர் ஒருவரை நீதிமன்றத்திற்கு உதவிகரமாக இருக்க வேண்டி திருவள்ளுரில் உள்ள Sri R.M. Jain பள்ளி தலைமை ஆசிரியருக்கு அழைப்பாணை அனுப்பட்டதின் பேரில் நியமனம் செய்யப்பட்ட திருமதி. ஸ்ரீபூரணி அவர்கள் மூலம் சாட்சியிடம் தமிழில் கேட்கப்பட்ட கேள்விகளை ஹிந்தியில் மொழி பெயர்த்து கூற, சாட்சி ஹிந்தியில் சொன்ன பதில்களை தமிழில் மொழி பெயர்த்து கூறுவதன் அடிப்படையில் திறந்த நீதிமன்றத்தில் மேற்படி சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.)**

**முதல் விசாரணை :** நான் ராஜஸ்தானில் வசித்து வருகிறேன். தற்போது நான் என்னுடைய கிராமத்தில் உள்ள ஸ்ரீ செக்யூரிட்டி தனியார் நிறுவனத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 2011 ல் மும்பை கார்பெட் சித்தி விநாயக லாஜஸ்டிக் லிமிடேட் நிறுவனத்தில் ஆப்ரேஷன் ( டிசல் கொடுப்பது, பணம் கொடுப்பது, அலுவலக வேலை, லோடுகளை ஏற்றுவது மற்றும் அதை அனுப்புவது, லோடு வண்டிகளை கண்பாணிப்பது) போன்ற வேலைகளை செய்து வந்தேன். 2014 ல் துாத்துக்குடியில் இதே நிறுவனத்தில் மாற்றலாகி Sterlite நிறுவனத்தில் லாரியில் லோடு ஏற்றும் வேலையில் வேலை செய்து வந்தேன். அதுமட்டுமல்லாமல் ( டிசல் கொடுப்பது, பணம் கொடுப்பது, அலுவலக வேலை, லோடுகளை ஏற்றுவது மற்றும் அதை அனுப்புவது, லோடு வண்டிகளை கண்பாணிப்பது) இந்த வேலையும் செய்து வந்தேன். கடந்த

03.09.2014 அன்று Sterlite நிறுவனத்தில் தூத்துக்குடி டூ குஜராத் லோடு ஏற்றிய போது டிசல் ரசீது கொடுத்தேன். அந்த லாரியின் நம்பர் தெரியாது. பல வருடங்கள் ஆகியதால் லாரியின் நம்பர் தெரியவில்லை, டிரைவர் பெயர் சவுகத் அலி. மறுநாள் டிரைவருடைய போன் ஆப் செய்யப்பட்டதால் மேனஜர் அமர்சிங் மும்பைக்கு போன் செய்தேன். நான் போன் செய்து சொன்னதால் மும்பை அலுவலகத்திலிருந்து லாரி ராங் ருட்டில் சென்னை நோக்கி செல்வதாக சென்னை அலுவலக மேனஜர் சுபாஷ் மெஹலாக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் சொன்னார்கள். சென்னைக்கு முன்பாக 35 அல்லது 40 கி.மீட்டருக்கு முன்பாக ராமாபுரத்தில் அந்த லாரியும் லாரியில் உள்ளே இருந்த காப்பர் பிடித்தாக கூறினார். அதன் பிறகு லாரி துாத்துகுடியிலிருந்து மதுரை, கிருஷ்ணகிரி, ஓசூர், பெங்களுர் வழியாக குஜராத் வழியாக சில்வாசா கம்பெனிக்கு செல்லும். சென்னையில் உள்ளவர்கள் வண்டியை கண்டுபிடித்தவுடன் சென்னை மேனஜர் சுபாஷ் மெஹலா புகார் கொடுத்தார். போலீசார் விசாரணையின் செய்யும் போது நானும் வண்டியின் டிரைவர் சவுகத் அலி ஆகியோரை விசாரணை செய்தார்கள். இங்கு வந்து விசாரிக்கும் போது டிரைவர் சொன்னார் வண்டி வந்தது 5 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கிருஷ்ணகிரி காட்டு அருகே டிரைவரை அடித்து கையிலிருந்த பணத்தையும் கைபேசியையும் பிடிங்கி கொண்டு லாரியை எடுத்து சென்றார்கள் என்று கூறினார். இதை போலீசார் விசாரணையில் டிரைவர் சொன்னார். போலீசார் என்னிடம் என்னென்ன ஆவணங்களை வாங்கினார்கள் என்று தற்போது எனக்கு ஞாபகமில்லை.

**1, 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

கார்பெட் சித்தி விநாயக லாஜஸ்டிக் லிமிடேட் நிறுவனத்தில் பணிபுரிந்தற்கான அடையாள அட்டை அலுவலக அதிகார பூர்வ தபால் ஏதேனும் போலீஸ் விசாரணையில் கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. வழிதவறி சென்ற வண்டிக்கு எந்த தேதியில் ஜிபிஎஸ் கருவி பொருத்தப்பட்டதற்குண்டான ஆவணங்கள் மற்றும் அந்த கருவி ஏதேனும் போலீஸ் விசாரணையில்

கொடுத்தேனா என்றால் எனக்கு தெரியாது. வண்டி எந்த வழியில் வழிமாறி போனதற்குண்டான ஆவணங்கள் ஏதேனும் போலீஸ் விசாரணையில் கொடுத்தேனா என்றால் இல்லை. தற்போது நீதிமன்றத்தில் கூறிய விவரங்கள் அனைத்தும் அவருடைய அலுவலகத்தில் போலீசார் விசாரணையில் சொல்ல சொன்ன விவரங்கள் கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாமல் வழக்கை பற்றி பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை 3, 4, 7, 11, 12 மற்றும் 13 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஏற்றுக்கொள்கிறார்.

**6, 9 மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

என் கல்வி தகுதி பிகாம். கார்பெட் சித்தி விநாயக லாஜஸ்டிக் லிமிடேட் நிறுவனத்தில் பணிபுரிந்தற்கான அடையாள அட்டை, சம்பள பட்டியல் போன்ற ஆவணங்களை போலீஸ் விசாரணையில் கொடுத்தேனா என்றால் எனக்கு தெரியாது. அந்த லாரியில் ஜிபிஎஸ் கருவி கண்காணிப்பேன் என்றால் என்னுடைய தினசரி பணியில் நான் அந்த வேலையை செய்வேன். போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் எனக்கு தேதி ஞாபகமில்லை, ஆனால் சம்பவம் நடந்த பிறகு போலீசார் விசாரித்தார்கள். வழக்கு நடந்த பிறகு இரண்டு மாதங்கள் கழித்து தான் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. இரண்டு மாதங்கள் கழித்து விசாரணை செய்தற்கான காரணம் என்னவென்றால் வழக்கிற்கு தகுந்தாற்போல் ஆவணங்கள் தயார் செய்வதற்கு தான் இரண்டு மாதம் கழித்து விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள லாரி சென்னையில் உள்ளது என்ற விவரம் மேனஜர் சுபாஷ் மெஹலா சொல்லி தான் தெரியும் என்றாலும் சரிதான். மேனஜர் சுபாஷ் மெஹலா சொன்ன பிறகு தான் ஜிபிஎஸ் கருவி சரி பார்த்தேன் என்றால் சரியல்ல. ஜிபிஎஸ் கருவியில் பதிவானதை சாப்ட்வேர் பயன்படுத்தி அதை அந்த ஜிபிஎஸ் கருவியில் பதிவானதை மாற்றம் செய்யும் முடியும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. ஜிபிஎஸ் கருவி எப்படி வேலை

செய்கிறது என்ற விவரம் எனக்கு தெரியாது. அது மும்பை நிறுவனத்திற்கு தான் தெரியும். ஜிபிஎஸ் கருவி எப்படி வேலை செய்கிறது என்ற விவரம் தெரியாத காரணத்தினால் நீங்கள் ஜிபிஎஸ் பதிவு குறித்து சாட்சி சொல்ல தகுதியானவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை பற்றியோ இந்த ஜிபிஎஸ் கருவி பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது காவல்துறை மற்றும் நிறுவனம் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/. M.A. Kabeer
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம்
திருவள்ளூர்,